**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி**
**முன்னிலை : திரு. என். ஞானசம்பந்தம், பி.ஏ.பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பழனி.**
**2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாள், வியாழக்கிழமை**

**இ.ம.எண்.4/2022**
**இன்**
**அ.வ.எண்.114/2022**

எம்.செல்லமுத்து --- மனுதாரர்/வாதி

/ எதிர் /

1. தர்மராஜ்
2. கார்த்தி ---எதிர்மனுதார்கள்/1, 2 பிரதிவாதிகள்

இந்த மனுவானது என் முன்பாக இதுநாள் வரையிலும் இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையின் கீழ் இருந்து வந்தும் மனுதார்/ வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வி.செல்வக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதார்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ஜெயராமன் மற்றும் திருமதி.எம்.கார்த்திகா ஆகியோர்கள் முன்னிலையாகியும், இறுதி விசாரணைக்காக 24.03.2023 ஆம் தேதி வந்தபோது, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்,

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்கில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் உதவியுடன் மனுச்சொத்தினையும், மனுச்சொத்திற்கு செல்லக்கூடியதும், பிராது மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சிவப்பு வர்ணமிட்ட பொதுநடைபாதையான சர்வே எண்.527-ல் தொடங்கி சர்வே எண்கள்.502, 503, 504-யை கடந்து மனுதாரர் / வாதி நடந்து சென்றும், ஆடு, மாடு வாகன ஊர்திகள் சென்று பயன்படுத்தி வருவதை பொறுத்து பார்வையிட்டு அதன் இயற்பியர்

தன்மைகளையும் குறிப்பிட்டு அளந்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஒருவரை ஆணையராக நியமனம் செய்து உத்தரவிடுமாறு மனுதார் /வாதியால் சி.பி.சி. ஆர்டர் 26, ரூல் 9 மற்றும் பிரிவு 151ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதார் /வாதி தரப்பு தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம் பின்வருமாறு:-</u>

மனுச்சொத்து ஆதியில் மனுதாரருடைய முன்னோர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக வழியில் வரப்பெற்ற சொத்துக்களாகும். மேற்படி சொத்துக்களை மனுதாரரின் தகப்பனாருக்கு கடந்த 12.06.1996ம் தேதிய பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் ( ஆவண எண்.459/1996) மூலம் " B " பாகமாக ஒதுக்கப்பட்ட பாகத்தின்படி பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி சொத்துக்களை மனுதாரரின் தகப்பனார் அனுபவித்து இருந்து வந்த நிலையில், மனுதாரரின் தகப்பனாரான முத்துச்சாமி கவுண்டர் என்பவர் மனுச்சொத்தை பொறுத்து தனக்கு வரப்பெற்ற பாகத்தின் அடிப்படையில் தனது மகனான மனுதாரருக்கு கடந்த 17.03.2020ம் தேதி ஒரு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தி வைத்து மேற்படி ஆவணம் கீரனூர் சார்பதிவகம், ஆவண எண்.484/2020 ஆக பதிவு செய்யப்பட்டு மேற்படி ஆவணம் ஊர்ஜிதத்தில் இருந்து வருகிறது.

இப்பால் மனுச்சொத்திற்கு செல்லக்கூடிய பொதுப்பாதையானது சர்வே எண்.527 ஆகும். அது காலங்காலமாக மண்பாதை இருந்து வருகிறது. அதில் தொடங்கி அதன்வழியாக மனுச்சொத்திற்கு எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளின் நிலமான சர்வே எண்கள்.502, 503, 504 ஆகிய நிலங்களின் வழியாக கடந்து மனுச்சொத்தை அடைந்து வருவதுதான் காலங்காலமாகவும், வழக்கமாகவும் மற்றும் வருவாய் ஆவணங்களின் படியும் இருந்து வருகிறது. அந்த அமைப்பின்படியே தான் மனுதாரரின் முன்பாத்தியஸ்தரும் தற்போது வரை மனுதாரரும் அனுபவித்து வருகிறார்கள். இப்பால் இந்த எதிர்மனுதாரர்கள் / 1, 2

பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை கடந்துதான் மனுதாரர், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட நிலத்திற்கு செல்லவேண்டியதாய் இருக்கிறது. இப்பால் எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் மனுச்சொத்திற்கு செல்லக்கூடிய பொதுநடைபாதையானதும், பிராது மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட சிவப்பு வர்ணமிட்டடு காட்டப்பட்ட ' A, B, C, D ' பகுதியில் கற்களை ஊன்றி நடக்கவிடாமலும், வாகனங்கள் செல்லமுடியாத அளவிற்கு இடையூறுகளை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறார்கள். மேற்படி பாதையும் எதிர்மனுதாரர்கள்/ 1, 2 பிரதிவாதிகளின் நிலத்தை ஒட்டியே அமைந்திருந்து வருகிறது. இப்பால் கடந்த 6 மாதகாலமாக மனுச்சொத்திற்கு செல்லக்கூடிய பொதுப்பாதையை எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் நடக்கவிடாமல் வழிமறித்து இருந்து வருகிறார்கள். மேலும் மேற்படி பாதையை ஆக்கிரமிப்பு செய்து தங்களது நிலங்களுடன் இணைத்துக்கொள்ள எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் திட்டமிட்டு இருந்து வருகிறார்கள்.

மனுதாரர் மனுச்சொத்திற்கு செல்லக்கூடிய பாதையானது சர்வே எண்.527 ல் தொடங்கி 502, 503, 504 வழியாக சென்று, நான் அனுபவித்து வந்த நிலையில், தற்போது எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள், மனுதாரருக்கு எவ்வகையிலாவது இடையூறு ஏற்படுத்தி மனுச்சொத்திற்கு செல்லவிடாமல் தடையும், இடைஞ்சலும் செய்தால் மனுதாரர் மனுச்சொத்தினை வேறு எவருக்கேனும் கிரையம் செய்ய முயற்சி செய்வார். அதனை வைத்து மனுச்சொத்தினை மோசடியாக குறைந்த மதிப்பிற்கு கிரையம் பெற்றுவிடலாம் என்ற கெட்ட எண்ணத்தோடு எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் செயல்பட்டு வருகிறார்கள். ஆனால் மனுதாரருக்கோ ஒருபோதும் மனுச்சொத்தினை விற்கும்நோக்கம் கிடையாது. மனுதாரருக்கு பிராது மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சிவப்பு வர்ணமிட்ட பாதையை தவிர வேறு மாற்றுப்பாதை கிடையாது. மேற்படி பாதையை வழிமறிக்கவோ, ஆக்கிரமிப்பு செய்யவோ,

அதனை அப்புறப்படுத்தவோ எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது.

எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தொடர்ந்து சட்டத்திற்கு புறம்பாக மனுதாரர் பயன்படுத்தி வரும் பொதுப்பாதையை அழிக்கும் நோக்கத்தோடு செயல்பட்டு வருவதால் மனுதாரர் கடந்த 08.04.2022ம் தேதி பழனி வட்டாட்சியருக்கு ஒரு புகார் மனு கொடுக்கப்பட்டு அந்த புகாரில் எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் பொதுப்பாதையை அழித்து ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்வது குறித்து புகார் கொடுக்கப்பட்டு அந்த புகாரின்பேரில் அரசு தரப்பில் உடனடியாக பார்வையிட்டு அப்போது ஓரிரு வாரங்களில் பொதுப்பாதையை உரிய முறையில் அளவை செய்து அத்துமால் கண்டு ஆவணம் செய்கிறோம். அதற்கிடையில் எந்தவித ஆக்கிரமிப்பு செய்யக்கூடாது என்று கூறிவிட்டார்கள். இப்பால் அதனுடைய இயல்பியல் தன்மையை மறைக்கும் நோக்கத்தோடு எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் செயல்பட்டு வருகிறார்கள். இப்பால் கடந்த 25.07.2022ம் தேதி மனுதாரர், தனது சொந்த வேலையின் காரணமாக வெளியூர் சென்ற சமயம் அதனை எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள் தனக்கு சாதகமாக பயன்படுத்திக்கொண்டு தாவா பொதுப்பாதையை அழித்து தங்களது நிலங்களுடன் சேர்த்துக்கொள்ள அதற்கான தளவாடச்சாமான்கள் மற்றும் வாகனங்களை கொண்டு வேலையை தொடங்கியபோது அது விபரம் மனுதாரருக்கு தெரியவந்து அப்போது மனுதாரரின் குடும்பத்தினர் மற்றும் மனுதாரரின் உறவினர்கள் மூலம் எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளின் சட்டவிரோதமான செயலை தடுத்து நிறுத்தி விட்டோம். அதன்பிறகு மனுதாரர் ஊர் திரும்பியபோது எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளின் சட்டவிரோதமான செயல்களை குறித்து நேரடியாக துயர்ந்து கேட்டபோது அப்போது எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகள், மனுதாரரை தரக்குறைவாக பேசி தாவா பொதுப்பாதையில் நடக்கவிடமாட்டோம் என்றும் அறிவுறுத்திவிட்டார்கள். அப்போது மனுதாரர், பொதுப்பாதையை நடக்கவிடாமல்

தடைசெய்வதும், அதை பயன்படுத்தவிடாமல் தடை செய்ய தங்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்று கூறிவிட்டேன். மனுதாரர் பயன்படுத்தி வரும் தாவா பொதுப்பாதையை ஏதேனும் அழித்து சேதப்படுத்தி விட்டார் மனுதாரா தாவா பாதையின் வழியாக நடக்கமுடியாமலும் மற்றும் வாகனங்களை எடுத்துச்செல்ல முடியாமலும், கால்நடைகளை கொண்டு செல்லமுடியாமலும் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகி மனுதாரர் வாழ்வாதாரத்தை இழக்கும் சூழ்நிலைக்கு தள்ளபட்டு விடுவார்.

எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளின் சட்டவிரோதமான செயல்களால் மனுதாரருக்கு அரசு தரப்பில் இருந்து எந்தவித நியாயமும் கிடைக்கவில்லை. மனுதார் தனி ஆளாக நின்று எதிர்மனுதாரர்கள் / 1, 2 பிரதிவாதிகளின் சட்டவிரோதமான செயல்களை தடுத்து நிறுத்தியிருந்து வருகிறார். இந்த மனுவில் ஆணையரை நியமனம் செய்வதால் இவ்வழக்கில் ஏற்படும் வீண் சந்தேகங்களும், வாய்மொழி சாட்சியங்களும் குறைய வாய்ப்புண்டு. இதில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. அவ்வாறு ஆணையர் நியமனம் செய்யாதபட்சத்தில் மனுச்சொத்தின் அமைப்பையும், அதன் புறக்கூறுகளையும் அதில் மனுதாரருக்கு சாதகமாக உள்ள அம்சங்களையும் நீதிமன்றத்தில் நிரூபிக்க இயலாமல் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்பட்டுவிடும் என மனு தாக்கல்.

**3. எதிர்மனுதார்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு:-** மனு அபிடவிட்டு பாரா 3ல் சொல்லியு்ள்ள மாதிரி வரைபடமானது தவறானதாகும். மனுதாரர் அவரது இஷ்டத்திற்கு மாதிரி வரைபடத்தினை வரைந்து தவறான சர்வே எண்களை குறிப்பிட்டு மேற்படி வரைபடமும் தாக்கல் செய்துள்ளார். மனு அபிடவிட்டு 4ல் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் தவறானது. மனு சொத்திற்கு மனுதாரர் எக்காலத்திலும் சர்வே எண்.527–ல் உள்ள பாதையினை பயன்படுத்தியது கிடையாது. அவ்வாறு பாதையை பயன்படுத்தியிருந்தால் மனுதாரர் தகப்பனார்

17.03.2020–ல் எழுதிவைத்த பத்திரத்திலேயே மேற்படி விவரங்களான பாதையினை பற்றி குறிப்பிட்டு இருப்பார். எக்காலத்திலும் மனுதாரர் இந்த பாதையினை பயன்படுத்தியது கிடையாது. மனுதாரர் மனுதாரரின் முன்பாத்தியஸ்தர்களோ எக்காலத்திலும் இந்த எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியப்பட்ட நிலத்தை கடந்து மேற்படியார்கள் இடத்திற்கு சென்றது கிடையாது.

எதிர்மனுதாரர்கள் எக்காலத்திலும் மாதிரி வரைபடத்தில் ' A, B, C, D ' என்ற வரைபடத்தில் கற்களை ஊன்றியோ முள்களை போட்டோ வாகனங்கள் செல்லமுடியாத அளவுக்கு இந்த மனுதாரருக்கு இடைஞ்சல் செய்வதாக கூறி இருப்பது கற்பனையாக ஒன்றாகும். ஏனென்றால் மனுதாரர் எக்காலத்திலும் வாதி வரைபடத்தில் கூறிய பகுதியினை பாதையாக பயன்படுத்தியது கிடையாது. மனுதாரர் கூறியுள்ள 506 நம்பருக்கு புல எண்.496, 497 அதிலிருந்து 506 நம்பருக்கு இதுவரை சென்று வந்துகொண்டிருந்தார். அதைபோல் தான் தற்பொழுதும் நடந்து வருகிறார். புல எண்.506–ல் மனுதாரரின் கூட்டு பங்குதாரரான கண்டிமுத்து என்பவரும் உள்ளார். அவரும் மேற்படி புல எண்.496, 497–ன் வழியாக தான் 506 நம்பருக்கு சென்று வருகிறார். வேண்டுமென்றே அவரை இவ்வழக்கில் கட்சிக்காரராக சேர்க்காமல் உள்ளார். அதற்காகவே இம்மனு தள்ளுபடிக்குரியதாகும். எதிர்மனுதாரர்கள் ஏதோ கடந்த 6 மாதங்களாக நடக்கவிடாமல் ஆக்கிரமிப்பு செய்து எதிர்மனுதாரர்கள் நிலத்துடன் இணைத்துக்கொள்ள திட்டமிட்டு இருந்து வருகிறார்கள் என்று கூறுவது முற்றிலும் தவறானது.

மனு அபிடவிட்டு பாரா 5–ல் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு மாறானதாகும். மனுதாரரோ மனுதாரரின் முன்பாத்தியஸ்தரோ எக்காலத்திலும் மனுதாரர் கோரும் பாதையை பயன்படுத்தியது கிடையாது. அவ்வாறு உள்ள சமயத்தில் ஏதோ எதிர்மனுதாரர்கள், மனுதாரரின் நிலத்தை குறைத்து மதிப்பிட்டு கிரையம் பெற்றுவிடலாம் என்ற கெட்ட எண்ணத்தோடு செயல்பட்டு வருவதாக கூறியிருப்பது அபாண்டமான குற்றச்சாட்டாகும்.

மனுதாரருக்கு மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பாதையை தவிர வேறு மாற்று பாதை இல்லை என்று கூறியிருப்பது மனுவிற்காக கற்பனையாக கூறப்பட்ட ஒன்றாகும்.

மனு அபிடவிட்டில் 6–ல் கூறியிள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானதாகும். மனுதாரர் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் காட்டியுள்ளவாரு நிலவியல் அமைப்பு கிடையாது. தவறான நிலவியல் அளவுகளை வைத்து மாதிரி வரைபடங்களை வரைந்து இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளது தள்ளுபடிக்குரியதாகும். மனுதாரர் ஏற்கனவே சென்று கொண்டிருந்த பாதையினை அவரது சகோதரி புல எண்.497–ல் தடுத்துவிட்டார். அதனால் தற்பொழுது எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறேனும் இடைஞ்சல் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த மனுவினை எதிர்மனுதாரர்கள் மீது தாக்கல் செய்துள்ளார். மேலும் மனுதாரர் குறிப்பிட்ட பாதை குறித்து எதிர்மனுதாரர்களின் பத்திரத்திலோ அல்லது மனுதாரரின் பத்திரத்திலோ பாதை குறித்து எவ்வித குறிப்புகளும் குறிப்பிடவில்லை. அவ்வாறு பாதை இருந்திருந்தால் மேற்படி பத்திரத்திலும் பாதை பற்றி குறிப்புகளும் குறிப்பிட்டு இருப்பார்கள். மனுதாரர் வழக்கமாக சென்று கொண்டிருந்த பாதையினை விட்டுவிட்டு எதிர்மனுதாரர்களுக்கு இடைஞ்சல் செய்யும் நோக்குடன் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த மனு தள்ளுபடிக்குரியதாகும். மேலும் மனுதாரருக்கு மனு தாக்கல் செய்ய முதல் நிலை வழக்கும் இல்லை. சமநிலை வாய்ப்பும் மனுதாரருக்கு சாதகமாக இல்லை. எனவே இம்மனு தள்ளுபடி ஆக வேண்டியது என எதிருரை தாக்கல்.

4. இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய விசயம் யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

6.அசல் வழக்கானது பாதை சம்மந்தப்பட்டதாகும். தாவா பாதையை 1, 2 எதிர்மனுதாரர்கள் அழிக்க முற்படுவதாகவும், அவ்வாறு அழித்து விட்டால் பாதையின் இயற்பியல் தன்மை மறைந்து விடும் என்றும், எனவே பாதை அமைப்பை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யும் பட்சத்தில் வாதி தரப்பு சாட்சியம் குறைவதற்கு ஏதுவாக இருக்கும் என்றும், வாதி தரப்பு வாதம் முன் வைக்கப்பட்டது.

7. எதிர்மனுதாரர்கள் தரப்பில் பாதை இல்லை என்றும், மாற்று பாதை இல்லை என்பது தவறு என்றும், பூமியில் மனுதாரர் குறிப்பிடுவது போல் பாதை அமைப்பே இல்லை என்றும் தங்களுக்கு இடைஞ்சல் செய்வதாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் எதிர்வாதம் செய்யப்பட்டது. தாவா பாதை பூமியில் உள்ளதா இல்லையா என்பதையும், அவ்வாறு இருந்தால் அதன் அளவுகள் பொறுத்து நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யும் பட்சத்தில் தாவா பாதை சம்மந்தமான இவ்வழக்கை தீர்மானிக்க உதவியாக இருக்கும். தவிர மாற்றுப்பாதை இல்லை என்பது தவறு என எதிர்மனுதாரர்கள் தரப்பிலும், மாற்றுப்பாதை இல்லை என மனுதாரர் தரப்பிலும் வாதம் செய்துள்ள நிலையில் தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு வரைபடம் தாக்கல் செய்யும் பட்சத்தில் இவ்வழக்கை தீர்மானிக்க உதவியாக இருக்கும் என்பதாலும், இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்டமும், நஷ்டமும் ஏற்படப்போவதில்லை என்பதாலும் இம்மனுவை அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்படுகிறது.

**இறுதியாக இம்மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் திரு.ரமேஷ்குமார் என்பவரை நீதிமன்ற ஆணையராக நியமனம் செய்து, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் உதவியுடன் மனுச்சொத்தினையும், மனுச்சொத்திற்கு செல்லக்கூடியதும், பிராது மாதிரி வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள சிவப்பு வர்ணமிட்ட தாவா பாதையை பார்வையிட்டு அதன் இயற்பியல் தன்மைகளையும்**

**குறிப்பிட்டு அளந்து வரைபடத்துடன் கூடிய அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர்/ நீதிமன்ற ஆணையரின் கட்டணம் ரூ.5000/—யை நீதிமன்ற ஆணையருக்கு செலுத்தவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. நீதிமன்ற ஆணையர் வரைபடம் மற்றும் அறிக்கை தாக்கல் செய்ய வாய்தா 06.06.2023.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் ஒப்பெழுதப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் நாளாகிய இன்று பகரப்பட்டது.

N GNANASAMBANDAM
Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.03.30 18:09:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.

**<u>மனுதார்/வாதி தரப்பு சாட்சி:—</u>** இல்லை.

**<u>மனுதார்/வாதி தரப்பு சான்றாவணங்கள்:—</u>**இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:—</u>** இல்லை.

**<u>எதிர்மனுதாரர்கள்/1, 2 பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:—</u>**இல்லை.

N GNANASAMBANDAM
Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.03.30 18:09:11 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.